**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (பகுதி – 1) - 2019**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (பகுதி – 1) 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், முன்னாள் மின்வலு, சக்தி மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சாகவிருந்த மின்சக்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. துாய மின்வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் நம்பிக்கைத்தன்மை என்பவற்றை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,509.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,325.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,183.60 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் மிகுதி தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பாாக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | AFD பங்களிப்பு தொடர்பாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்கத்தின் CS-DRMS அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கிடையே ரூபா 9,584,574 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் கடன் மீதி குறைத்துக் காட்டப்படுதல் | 2020 சனவரியில் FY 2019 இற்கான இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கும் போது வெளிநாட்டு பணவளிப்புக்களிற்கான ERD கூற்று (DRMS – அறிக்கை) நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை. ஆகையால் 2019 திசெம்பர் மாத AFD முற்பணக் கட்டுநிதி பணவளிப்பானது கொடுக்கல் வாங்கல் திகதியில் CBSL பரிவர்த்தனை விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. பணவளிப்பு ERD கூற்றானது (DRMS) FY2019 பிந்திய பணவளிப்புக்களிற்காக 2020-02-27 இல் வெளியிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் பரிவர்த்தனை விகித வேறுபாடு (ரூபா | பெறப்பட்ட திகதியில் கடன் பெறுகைகளை பதிவு செய்வதற்கு பரிவர்த்தனை விகிதத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 9,584,574) கொடுக்கல் வாங்கல் திகதியில் CBSL பரிவர்த்தனை விகிதம் மற்றும் DRMS அறிக்கையில் ERD ஆல் பயன்படுத்தப்பட்ட பரிவர்த்தனை விகிதம் என்பன CEB நிதிக்கூற்றுக்களில் 2020 மே மாதத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் FY2020 இல் மேற்படி வேறுபாடு சீர் செய்யப்பட்டிருந்ததுடன் CEB நிதிக்கூற்றுக்களில் தொகை பிரதிபலிக்கப்பட்டு ERD DRMS அறிக்கை இணங்கி காணப்படுகின்றது. | |
| (ஆ) | எல்கேஏஎஸ் 01 இற்கு முரணாக பரிவர்த்தனை இலாபம் ரூபா 9,925,801 பெறப்பட்ட வட்டியாக வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டின் ஒப்பீட்டுத் தொகைகளில் காட்டப்பட்டிருந்தன. | இலாபத்தின் பிழையான வகைப்படுத்தல் காரணமாக தீர்மானம் எடுத்தல் பாதிக்கப்படும். | AFM செயற்திட்டக் கிளையால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் மொறகொல்ல நீர் மின்வலு செயற்திட்டத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,925,801 பரிமாற்ற இலாபம் சரியாக வகைப்படுத்தப்பட்டு பரிவர்த்தனை விகித இலாபமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. FY 2018 மற்றும் FY 2019 இற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் WIP கூற்றின் பிரதி குறிப்பிற்காக பின்னிணைப்பு I இல் இணைக்கப்பட்டுள்ளது. CEB ஆல் சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த செயற்திட்ட நிதிக்கூற்றில் சொற்கள்/வகைப்படுத்தல் தவறு சீர் செய்யப்பட முடியும். | இலாப விடயங்களின் வகைப்படுத்தல் நிதிக்கூற்றுக்களில் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதி 03 இன் ரூபா 1,203,511 நிலையான சொத்து பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவி | செயற்திட்டத்தின் உண்மையான கிரயத்தை பிரதிபலிக்காததுடன் நடைமுறை வேலை மீதி | CEB நிதிகள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மாற்றல் உறுதிச்சீட்டுக்களை பயன்படுத்தி AGM | நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கிரயம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ல்லை. இதன் விளைவாக செயற்பாட்டுச் செலவினம் அதே தொகையால் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்படும். | விநியோக பிரிவு 2 இன் கீழ் பதிவு செய்யப்படுகின்றதுடன் இச் சொத்துக்கள் தொடர்பான பெறுமானத்தேய்வும் அதே பிரிவிற்கு சாட்டுதல் செய்யப்படுகின்றது. சொத்தக்கள் மற்றும் அவற்றின் கிரயம் தொடர்பான பொருந்துதல் எண்ணக்கருவின் பிரகாரம் அதே பிரிவில் குறிப்பிடப்படுவது அவசியமாகும். | |
| (ஈ) | நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதி 03 இற்காக செலுத்த வேண்டிய ரூபா 7,152,942 தொகையான ஒப்பந்ததாரர் விலைப்பட்டியல்கள் நிகழ்ச்சித்திட்ட நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 2.1 இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைமுறை வேலைப் பெறுமதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் உண்மையான கிரயத்தை பிரதிபலிக்காததுடன் நடைமுறை வேலை மீதி நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்படும். | செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களின் முதல் மூன்று விடயங்கள் 2020 சனவரியில் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்ட நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 2.1 இன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கிரயம் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09 (அ) பிரிவு | நிகழ்ச்சிதிட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு இலங்கை மின்சார சபையால் தனித்தனியான பதிவேட்டு கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி முகாமைத்துவம் தொடர்பான பலவீனமான கட்டுப்பாடுகள் | கடன் உடன்படிக்கையின் 2.09 ஆம் பிரிவின் பிரகாரம் மொறகொல்ல நீர் மின்வலு நிலைய நிர்மாணம் மற்றும் பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற | நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய கிரயத்தை இனங்காண்பதற்கு ஒரு நிறுவனமாக நிகழ்ச்சிதிட்டத்தின் அனைத்து பகுதிகளினதும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதி 1 – பாகம் 2 செயற்திட்டம் என்பவற்றிற்காக தனித்தனியான கணக்குப் புத்தகங்கள் மற்றும் தனித்தனியான நிதிக்கூற்றுக்களை செயற்திட்டப் பிரிவு பேணுகின்றது. இச் செயற்திட்டத்திற்காக தனியான பதிவேட்டை பேணுவதற்கு விசேடமாக நிதி HQ இடமிருந்து 2014 ஆம் ஆண்டில் கிரய நிலைய குறியீட்டு இல. 980.62 மற்றும் 980.63 என்பன பெறப்பட்டிருந்ததால் இவ் அவதானிப்பை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | இலங்கை மின்சார சபையால் தனித்தனியான பதிவேட்டுக் கணக்குகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆம் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பலவீனமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் | செயற்திட்டத்தின் பகுதி 2 ஆல் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்காக விரிவான உள்ளகக் கணக்காய்வு CEB இன் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் ஆக்கபூர்வமான தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் தொடர்ச்சியாக உள்ளகக் கணக்காய்வு பிரிவால் நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க | நிகழ்ச்சிதிட்டம் உழைக்கும் போதே செலுத்தும் வரியை செலுத்தியிருந்ததுடன் மீளாய்வு | நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு பிரிவின் அதிகரித்த கிரயம் | இலங்கை மின்சார சபை ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் | PAYE வரி ஊழியர்களின் மொத்தச் சம்பளங்களிலிருந்து அறவிடப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| பொது முயற்சிகள் சுற்றறிக்கை | காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து இதனை கழிக்காமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து வரியாக ரூபா 12,012,424 தொகையை செலுத்தியிருந்தது | | வரிப் பொறுப்பு இலங்கை மின்சார சபையால் தாங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. | வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

நிகழ்ச்சிதிட்டத்தின் நடவடிக்கைகளானது 05 பகுதிகளை கொண்டுள்ளதுடன் நிகழ்ச்சிதிட்டத்தின் அத்தகைய பகுதிகளின் நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பானது இலங்கை மின்சாரசபையால் கையாளப்படும் அனைத்து நன்கொடை நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மேற்பார்வைக்கு பொறுப்பாகவுள்ள மேலதிக பொது முகாமையாளரிற்கு பதிலாக இலங்கை மின்சார சபையின் வெவ்வேறு பிரதேச தலைவர்களின் அதிகார எல்லையின் கீழ் காணப்பட்டிருந்ததால் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பு திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. நிகழ்ச்சித்திட்டத்தின் ஐந்து பகுதிகள் தொடர்பான நிர்மாண வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் உரிய ஒப்பந்ததாரர்களின் கிரய அதிகரிப்புக்கள் மற்றும் காலநீடிப்புக்களிற்கான வாய்ப்புக்களை அனுமதித்து இலக்குகளிற்கு பின்னடைந்து காணப்பட்டது. அவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறுகள் | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | நீர்மின்வலு உற்பத்தி | மொறகொல்ல நீர் மின்வலு நிலையத்தின் நிர்மாணத்தின் உள்ளபடியான ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றல் 24 சதவீதமாக காணப்பட்டதுடன் இது எதிர்பார்க்கப்பட்ட 31 சதவீதத்துடன் ஒப்பிடும் போது நிர்மாண மேற்பார்வைக்கான மதியுரையாளர்களை நியமிப்பதிலுள்ள தாமதம், Lot A தொடர்பான பெறுகை வேலையில் தாமதம் மற்றும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மேலதிக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கைக்கான காலநீடிப்புக்களை | நீண்ட கால குறைந்த கிரய மின்வலு உற்பத்தி நிலையத்தின் குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்பட மாட்டாது. | செயற்திட்ட தாமதத்திற்கான பிரதான காரணங்கள் பின்வருவனவற்றினால் ஆகும்.<br>1. நிர்மாண மேற்பார்வைக்கான மதியுரையாளரை நியமனம் செய்வதிலுள்ள தாமதம்<br>2. செயற்திட்ட அங்கீகரிக்கும் அதிகாரியால் EIA மற்றும் மேலதிக EIA இற்கான காலநீடிப்புக்களை அங்கீகரிப்பதிலுள்ள தாமதம்<br>3. செயற்திட்ட அங்கீகரிக்கும் அதிகாரியிடமிருந்தான வேண்டுகோளின் | கடப்பாட்டுக் கட்டணங்களை தவிர்ப்பதற்கும் தாமதமின்றி நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கும் அதிகாரியால் அங்கீகரிப்பதில் தாமதம் போன்றன காரணமாக பின்னடைந்து காணப்பட்டது. ஆகையால் 2023 ஆகஸ்ட் தொடக்கம் 2019 திசெம்பர் வரை பிரதான ஒப்பந்ததாரர்களிற்கு காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. பகுதி I இன் உள்ளபடியான நிதி செயன்முன்னேற்றம் ரூபா 3,084 மில்லியனாக காணப்பட்டதுடன் இது எதிர்பார்க்கப்பட்ட ரூபா 5,994 மில்லியன் நிதிச் செயன்முன்னேற்றத்துடன் ஒப்பிடும் போது பின்னடைந்திருந்தது. | | அடிப்படையில் அணையை மீள்வடிவமைத்தல் காரணமாக Lot A (சிவில் வேலைகள்) தொடர்பான பெறுகை வேலையில் தாமதம் | |
| (ஆ) | முன்னேற்றப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு | மின்சார பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய கப்பைதுறையிலுள்ள மின்கட்டமைப்பு உபநிலையத்தின் நிர்மாண வேலைகள் மற்றும் கெரவலப்பிட்டிய, கட்டுநாயக்கா மற்றும் திருகோணமலையிலுள்ள மின்கட்டமைப்பு உபநிலையங்களின் மேம்பாட்டு வேலைகள் என்பவற்றின் பௌதீக செயன்முன்னேற்றமானது உள்ளூராட்சி அமைப்புக்களால் நிரப்புதல் மூலப்பொருட்களை போக்குவரத்து செய்வதற்கான மட்டுப்பாடுகள் காரணமாக செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 04 ஆண்டுகள் கடந்திருந்த பின்னரும் 90 | -மேற்படி- | இச் செயற்திட்டத்தின் Lot A ஒப்பந்தம் 2016 மார்ச் 15 தொடக்கம் அமுலுக்கு வந்திருந்ததுடன் இது இரண்டு ஆண்டு ஒப்பந்தங்களாக 2018 மார்ச் 15 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2019 திசெம்பர் 15 வரை கால நீடிப்பு (ஈஓரீ) வழங்கப்பட்டிருந்தது. கெரவலப்பிட்டிய GS, கட்டுநாயக்கா GS மற்றும் திருகோணமலை GS இல் மேம்படுத்தல் வேலைகள் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டு வணிகரீதியாக பலப்படுத்தப்பட்டது. உள்ளூராட்சி அமைப்புக்களால் நிரப்புதல் மூலப்பொருட்களை போக்குவரத்துச் செய்வதன் மட்டுப்பாடுகள் | -மேற்படி- |

சதவீதத்தில் மெதுவாக காணப்பட்டது. மேலும் கெஸ்பெவ மற்றும் களுத்துறையிலுள்ள மின்கட்டமைப்பு உபநிலைய நிர்மாணம் மற்றும் அனுராதபுரம், புதிய அனுராதபுரத்திலுள்ள பழைய மின்கட்டமைப்பு உபநிலைய மேம்படுத்தல் என்பன 69.5 சதவீதத்தில் காணப்பட்டதுடன் இணைந்த பரிமாற்ற வரிசைகளின் நிர்மாணம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 96.8 சதவீதத்தில் காணப்பட்டது. அத்துடன் உள்ளூராட்சி அமைப்புக்களால் நிரப்புதல் மூலப்பொருட்களை போக்குவரத்துச் செய்வதன் மட்டுப்பாடுகள் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட 100 சதவீத செயன்முன்னேற்றம் பின்னடைந்திருந்தது. காரணமாக ஒப்பந்தத்தில் குறிப்பிடத்தக்களவு வேலைகளை கொண்டுள்ள கப்பல்துறை வேலைத்தளத்தில் மண்நிரப்புதல் செயன்முன்னேற்றத்தால் பாதிப்படைந்திருந்தது. மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் கூடிய நிலைமையும் செயற்திட்ட வேலைகளில் தாமதத்தை ஏற்படுத்தியிருந்தது. இவ் எதிர்பாராத நிலைமைகளின் காரணமாக ஒப்பந்ததாரர் காலநீடிப்பொன்றை கோரியிருந்ததுடன் அது மீளாய்வில் உள்ளது.

மேலும் இச் செயற்திட்டத்தின் Lot B1 ஒப்பந்தம் 2016 நவம்பர் 04 தொடக்கம் அமுலுக்கு வந்திருந்ததுடன் இது இரண்டு ஆண்டு ஒப்பந்தங்களாக 2018 நவம்பர் 04 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2019 நவம்பர் 03 வரை கால நீடிப்பு (ஈஓரீ) வழங்கப்பட்டிருந்தது. புதிய அனுராதபுர மின்கட்டமைப்பு உபநிலையத்தில் மேம்படுத்தல் வேலைகள் 2019 திசெம்பர் 31 அளவில் கிட்டத்தட்ட பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2020 சனவரியில் வணிகரீதியாக பலப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. உள்ளூராட்சி

அமைப்புக்களால் நிரப்புதல் மூலப்பொருட்களை போக்குவரத்துச் செய்வதன் மட்டுப்பாடுகள் காரணமாக இவ் ஒப்பந்தத்தில் கெஸ்பெவ, அனுராதபுரம் மற்றும் களுத்துறை வேலைத்தளங்களில் மண்நிரப்புதல் செயன்முன்னேற்றம் பாதிப்படைந்திருந்தது. மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் கூடிய நிலைமையும் செயற்திட்ட வேலைகளில் தாமதத்தை ஏற்படுத்தியிருந்தது. இவ் எதிர்பாராத நிலைமைகளின் காரணமாக ஒப்பந்ததாரர் காலநீடிப்பொன்றை கோரியிருந்ததுடன் அது மீளாய்வில் உள்ளது.

மேலும் இச் செயற்திட்டத்தின் Lot B2 ஒப்பந்தம் 2016 நவம்பர் 10 தொடக்கம் அமுலுக்கு வந்திருந்ததுடன் இது இரண்டு ஆண்டு ஒப்பந்தங்களாக 2018 நவம்பர் 10 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. 2020 சனவரி 31 வரை கால நீடிப்பு (ஈஓரீ) வழங்கப்பட்டிருந்தது. இது மேற்படி Lot A & Lot B1 ஒப்பந்தங்களிற்கான இணைந்த பரிமாற்ற வரிசைகளை கொண்டுள்ளது. களுத்துறை, கெஸ்பெவ மற்றும் திருகோணமலையிலுள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ள பரிமாற்ற வரிசை பிரிவுகள் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தன. இவ் ஒப்பந்தத்தில் அனுராதபுர வரிசை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்ததுடன் 98% பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. 2020 சனவரி மாத இறுதியளவில் இவ் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (இ) | வினைத் திறனான நடுத்தர வோல்ரேச் வலையமைப்பு | நடுத்தர வோல்ரேஜ் மின்கட்டமைப்பின் வினைத்திறனை முன்னேற்றுவதற்காக வவுணதீவு மற்றும் மாதம்பை பகுதியை சுற்றி 92 கிலோமீற்றர் பரப்பில் 33 KV நடுத்தர வோல்ரேஜ் பரிமாற்ற வரிசைகளை நிறுவுதல் மற்றும் நடுத்தர வோல்ரேஜ் மின்கட்டமைப்பு மற்றும் gantries இன் நிர்மாணம் ஆகியவற்றின் கீழான வேலைகள் காணி அனுமதிகளிலுள்ள தாமதங்கள் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 90 சதவீதத்தில் காணப்பட்டன. 2020 பெப்ரவரி 25 ஆம் திகதிய 20.03.049 ஆம் இலக்க சபைக் கூட்டக் குறிப்பின் பிரகாரம் சட்ட வழக்குகள் நிலுவையில் காணப்படுவதால் செயற்திட்டத்தின் இப்பகுதி முடிவுசெய்யப்பட்டு சபையின் விநியோக பிரிவு 02 இற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இது சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் | --மேற்படி- | வவுணதீவு பரிமாற்ற வரிசைகளின் செயன்முன்னேற்றம் இலங்கை மின்சார சபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள கோபுர இடஅமைவுகள் தொடர்பான சட்டப் பிரச்சனைகளால் பாதிப்படைந்துள்ளது. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | காணப்படுவதால் இவ்வழக்குகளை காலவரையறையின்றி தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | | | |
| (ஈ) | சக்தி வினைத்திறனிற்கான கேள்விப் பக்க முகாமைத்துவம் | Smart metering ஆரம்ப செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் வழங்கப்பட்டு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 10 மாதங்கள் கடந்த பின்னர் 2019 யூலை 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் மேற்குறிப்பிட்ட கூறின் கீழ் அமுல்ப்படுத்தப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட Thermal Storage ஆரம்ப செயற்திட்டம் மற்றும் Smart Building ஆரம்ப செயற்திட்டம் என்பவற்றின் கீழான நிர்மாண வேலைகள் கேள்விப் பக்க முகாமைத்துவ செயற்திட்ட எண்ணக்கருக்கள் பற்றி இடம்பெற்ற வெளிப்புற சுற்றாடல் மாற்றங்கள் காரணமாக பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | வழங்கப்படாத மீதிகளிற்காக கடப்பாட்டுக் கட்டணம் அறவிடப்படும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |
| (உ) | பகுதி 05 – வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி உதவி | இரண்டாவது பகுதிக்காக புதிய செயற்திட்டத்தை தயாரிப்பது தொடர்பாக 2016 ஆகஸ்ட் 12 இல் இறுதி அறிக்கையை மதியுரையாளர் சமர்ப்பித்ததன் காரணமாக மின்வலு துறை அபிவிருத்தி, முறைமை, பரிமாற்றம் மற்றும் எரிசக்தி முன்னேற்றம் என்பவற்றிற்கான நிறுவகரீதியான இயலளவிற்காக மதியுரை சேவை வழங்குதல் | வழங்கப்படாத மீதிகளிற்காக கடப்பாட்டுக் கட்டணம் அறவிடப்படும். | கருத்துரை வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மதியுரை சேவைக்கான ஒப்பந்தம் 2018 பெப்ரவரி 12 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. கடன் வழங்கும் முகவரால் பகுதி 2 இனை தயாரிப்பதற்கு நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ உதவிக்கான மதியுரை சேவைக்காக வழங்கப்பட்ட ரூபா 33,411,948 இற்குச் சமமான ஐ.அ.டொலர் 851,150 ஒதுக்கீட்டில் ரூபா 14,039,953 இற்குச் சமமான ஐ.அ.டொலர் 577,393 தொகை மாத்திரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| நிகழ்ச்சிதிட்டத்தின் நடவடிக்கைகளானது 05 பகுதிகளை கொண்டுள்ளதுடன் நிகழ்ச்சிதிட்டத்தின் அத்தகைய பகுதிகளின் நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பானது இலங்கை மின்சாரசபையால் கையாளப்படும் அனைத்து நன்கொடை நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மேற்பார்வைக்கு பொறுப்பாகவுள்ள மேலதிக பொது முகாமையாளரிற்கு பதிலாக இலங்கை மின்சார சபையின் வெவ்வேறு பிரதேச தலைவர்களின் அதிகார எல்லையின் கீழ் காணப்பட்டிருந்ததால் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பு திருப்திகரமான மட்டத்தில் | மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு பொறிமுறை நலிவாக இருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் தொடர்பாக மெதுவான செயன்முன்னேற்றம் காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்பிற்கு பொறுப்பாக சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பது அவசியம். |

காணப்படவில்லை.
நிகழ்ச்சித்திட்டத்தின் ஐந்து பகுதிகள் தொடர்பான நிர்மாண வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் உரிய ஒப்பந்ததாரர்களின் கிரய அதிகரிப்புக்கள் மற்றும் காலநீடிப்புக்களிற்கான வாய்ப்புக்களை அனுமதித்து இலக்குகளிற்கு பின்னடைந்து காணப்பட்டது.